## 8.32 உள்ளாட்சி நிதிக் கணக்குகள் – இயக்குநரால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட முறைகேடுகளை சரி செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவினைத் திருத்தியமைத்தது – மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைத்தல்

ஊரக வளர்ச்சித் (சி3) துறை

அரசாணை (நிலை) எண். 324 நாள் : 13.11.1997

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 850, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 28.5.79.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித எண். 57764/93/AC.1–2 நாள் 3.5.94 மற்றும் 3.6.97.

**ஆணை:**

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் பேரூராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களில், ஓய்வு பெற்ற / ஓய்வு பெறும் நிலையிலுள்ள ஊரக வளர்ச்சிப் பிரிவு அலுவலர்களால் செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநரால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட முறைகேடுகளில், மூன்று வருடங்களுக்கு மேல் நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை சரி செய்வதற்கென ஒரு உயர்மட்டக் குழு அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. இக்குழுவினால் இதுவரை 27 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், 825 நபர்கள் தொடர்பான நிலுவைக் குற்றச் சாட்டுப் பத்திகள் சரி செய்யப்பட்டுள்ளதாகவும், இதேபோன்று, இக்குழுவானது செயல்பட்டு எல்லா மாவட்டங்களிலும் உள்ள நிலுவைப் பத்திகளைச் சரி செய்ய காலதாமதம் ஏற்படும் நிலை உள்ளது எனவும், இதனைத் தவிர்க்க 12.7.97 அன்று ஓய்வு ஊதியச் சங்கப் பிரதிநிதிகள், வளர்ச்சிப் பணி ஆணையர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் இயக்குநர் ஆகியோர் கூடி விவாதிக்கப்பட்டதில் தணிக்கைப் பத்திகள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட திருத்திய குழுவினை மாவட்டந்தோறும் ஏற்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களால் பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.–

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | .. | தலைவர் |
| 2. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | .. | துணைத் தலைவர் |
| 3. | உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் துணை இயக்குநர் | .. | உறுப்பினர் |
| 4. | செயற்பொறியாளர் (ஊ.வ.) (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் இணைக்கப்பட்டது) | .. | உறுப்பினர் |
| 5. | ஊரக வளர்ச்சி இயக்ககத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி (உ.இ./க.அ. பதவிகளுக்குக் குறையாமல்) | .. | உறுப்பினர் |
| 6. | மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (ஊ.வ. / தணிக்கை) | .. | செயலர் மற்றும் குழு கூட்டுபவர் |

3. இதைத் தவிர ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட மாநில அளவிலான குழுவினை அமைக்கவும் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.–

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி இயக்குநர் | .. | தலைவர் |
| 2. | உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநர் | .. | உப தலைவர் |
| 3. | நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர், ஊரக வளர்ச்சி இயக்குநரகம், சென்னை | .. | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர் |
| 4. | தலைமைப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் | .. | உறுப்பினர் |
| 5. | தலைமைப் பொறியாளர் அல்லது அவரது பிரதிநிதி, நெடுஞ்சாலை (மற்றும்) ஊரகப் பணித் துறை | .. | உறுப்பினர் |
| 6. | சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊ.வ. / தணிக்கை) | .. | உறுப்பினர் |

4. ஊரக வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்ட மேற்காணும் பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரைகளை ஏற்று பார்வை ஒன்றில் காணும் அரசாணைகளை ரத்து செய்து பத்தி 2 மற்றும் பத்தி 3ல் உள்ளவாறு மாவட்டந்தோறும் மற்றும் மாநில அளவில் குழுக்களை அமைக்க அரசு ஆணையிடுகிறது.

5. மாவட்டந்தோறும் அமைக்கப்படும் குழுவானது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி கீழ்க்கண்ட பணிகளைச் செய்யவும், மாநில அளவில் அமைக்கப்படும் குழுவானது மாவட்டக் குழுவின் பணிகளை மேற்பார்வையிடவும், மாவட்ட அளவில் தீர்க்கப்படாத தீர்வுகளை தீர்வு செய்யவும் ஆணையிடப்படுகிறது.

1. வட்டார வளர்ச்சி அலுவலர்/வளர்ச்சிப் பணி அலுவலர் ஆகியோரை மேல் விசாரணைக்காக குழுவின் முன் தோன்றச் செய்தல் மற்றும் கூடுதல் விளக்கங்கள் ஏதேனும் இருந்தால் பெறுதல்;
2. முறைகேடுகள் பற்றிய அறிக்கையை குழுவின் முன் வைத்து பரிசீலனை செய்தல்
3. இழப்புகளுக்கான பெறுப்பினை வளர்ச்சிப் பணி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பணியாளர்களிடையே பகிர்ந்து இழப்பினை முழுவதுமாகவோ, அடையாளப் பிடித்தமாகவோ இழப்பினை ஈடு கட்டுதல்;
4. அதிகமான தொகை அளிக்கப்பட்ட ஒவ்வொரு நிகழ்வினையும் ஆராய்ந்து தகுதியுள்ள நிகழ்வுகளில் பணம் திரும்பப் பெறுவதைக் கைவிடுதல்;
5. ஒவ்வொரு முறைகேடுகளையும் முறைகேடுகளில் உள்ள தன்மையின் அடிப்படையில் பொருட்படுத்தாது விடுதல்;
6. எந்தவொரு தணிக்கைத் தடைக்கானது அரசு அளவில் பிழை பொறுத்தல் பெறப்படல் வேண்டும் எனில், குழுவானது அத்தகைய நிகழ்வுகளை அரசுக்குப் பரிந்துரை செய்தல்;
7. இக்குழு பரிந்துரைத்துள்ளவைகள் மற்றும் தணிக்கையில் கோரப்பட்டுள்ளவைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆகியோருக்கு அறிவுறுத்தல்.

6. மாவட்டந்தோறும் அமைக்கப்பட்ட குழு மற்றும் மாநிலக் குழுவானது சட்ட ரீதியல்லாததாகும். ஊரக வளர்ச்சிப் பிரிவு அலுவலர்களால் செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநரால் சுட்டிக் காட்டப்பட்ட எல்லாக் காலத்திற்கும் உட்பட்ட தணிக்கைத் தடைகளை குழுக்களால் பரிசீலிக்கப்படும். மாநிலக் கணக்காயரின் தணிக்கைத் தடைகள் மற்றும் கண்காணிப்பு லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை விசாரணை செய்ய வேண்டிய நிகழ்வுகள் குழுக்களினால் பரிசீலிக்கப்பட மாட்டாது. இவ்விரு குழுக்களிலும் அங்கம் வகிக்கும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊ.வ./தணிக்கை) செய்தி ஒருங்கிணைப்பாளராக (Communication link) செயல்படுவார்.

7. அரசு ஆணை (நிலை) எண். 519, நிதித் (சம்பளம்) துறை, நாள் 29.9.97–ன்படி நிதித் துறையின் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்